Regional Bulletin / Puducherry / Tamil Script / 17.06-2024

**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 17.06.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி விவசாயிகளுக்கான வேளாண் நிதி உதவி திட்டமான கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ், 17 ஆவது தவணை தொகையை நாளை விடுவிக்கிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது எண்ண ஓட்டங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் மன் கீ பாத் நிகழ்ச்சிக்கு பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் வரவேற்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று தேங்காய்திட்டு மீன் பிடி துறைமுகத்தில் நடைபெற்ற மாணவர்களின் கடல் சாகச பயண நிறைவு விழாவில் கலந்து கொண்டார்.

தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை இஸ்லாமிய பெருமக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

*கிசான் சம்மான்* 1 (15)

பிரதமர் திரு நரேந்திர மோடி விவசாயிகளுக்கான வேளாண் நிதி உதவி திட்டமான கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ், 17 ஆவது தவணை தொகையை நாளை விடுவிக்கிறார். இதன் மூலம், 9 கோடியே 26 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்கில், நேரடியாக, 20 ஆயிரம் கோடி ரூபாய் செலுத்தப்படுகிறது. உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் நாளை மாலை நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுவை சேர்ந்த மகளிருக்கு கிரிஷி சகி சான்றதழ்களையும் இந்நிகழ்ச்சியில்

பிரதமர் வழங்க உள்ளார். 3 ஆவது முறையாக பதவி பிரதமராக பதவி ஏற்ற பின் விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதில் அரசின் உறுதிப்பாட்டை எதிரொலிக்கும் விதமாக பி.எம் கிசான் நிதியில் இருந்து 17 ஆவது தவணைத் தொகையை விடுவிப்பதற்கு ஒப்புதல் அளிக்கும் முதலாவது கோப்பில் பிரதமர் திரு நரேந்திர மோடி கையெழுத்திட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

*கிசான் சம்மான்* 2 (17)

இந்நிகழ்ச்சியை தொடர்ந்து நாளை மறுநாள் பீகார் மாநிலம் செல்லும பிரதமர் அங்கு, இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பில் உருவாகி உள்ள நாளந்தா பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தை திறந்து வைக்கிறார். இந்த விழாவில், 17 நாடுகளை சேர்ந்த தூதரக தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். இந்த வளாகத்தில் ஆயிரத்து தொள்ளாயிரம் இருக்கைகள் கொண்ட 40 வகுப்பறைகள்

உள்ளன. 550 மாணவர்கள் தங்கி கல்வி பயிலக் கூடிய வகையில், மாணவர் விடுதியும் உள்ளது. 2 ஆயிரம் நபர்கள் அமரக் கூடிய ஆம்பி தியேட்டர், சர்வதேச மையம், விளையாட்டு வளாகம் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளும் இந்த வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் இந்த வளாகம் பசுமை வளாகமாக அமைக்கப்பட்டுள்ளது. நாளந்தா பல்கலைக் கழகம் சுமார் ஆயிரத்து 600 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட, உலகின் பழமையான பல்கலைக்கழகம் என்பதோடு, மாணவர்கள் தங்கி கல்வி பயிலும் வகையிலான பல்கலைக்கழகமாகவும் திகழ்ந்தது. ஐக்கிய நாடுகள் சபையானது 2016 ஆம் ஆண்டு, பழமையான நாளந்தா பல்கலைக் கழக வளாகத்தை பாரம்பரிய தளமாக அறிவித்தது குறிப்பிடத் தக்கது.

*மன் கீ பாத்* (15)

பிரதமர் திரு நரேந்திர மோடி இம்மாதம் 30 ஆம் தேதி ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பாகும் மன் கீ பாத் நிகழ்ச்சியில்,

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களோடு தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்கிறார். பிரதமர் பங்கேற்றும் 111 ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சியாக இது அமைந்துள்ளது. இந்த நிகழ்ச்சியில் இடம் பெறும் வகையில் பொதுமக்கள் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவிக்கலாம் என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. நரேந்திரமோடி மொபைல் செயலி அல்லது மை கவ் இணையதளம் வாயிலாகவோ, அல்லது 1800-117800 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலமாகவும் மக்கள் தங்கள் கருத்துக்களை இம்மாதம் 28 ஆம் தேதி வரை தெரிவிக்கலாம். மன் கீ பாத் நிகழ்ச்சியானது ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன், ஏஆர் நியூஸ், இணையதளம் மற்றும் நியூஸ் ஆன் ஏர் மொபைல் செயலி மூலமாக ஒலிபரப்பப் படுகிறது. மேலும், டிடி நியூஸ், பிரதமர் அலுவலகம் மற்றும் தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் யூ-டியூப் சேனல்களிலும் மன் கீ பாத் நிகழ்ச்சி நேரடியாக ஒளிபரப்பப் படுகிறது.

*ரயில் விபத்து 1* (18)

மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள நியூ ஜல்பைகுரி ரயில் நிலையம் அருகே இன்று காலை பயணிகள் ரயில் மீது சரக்கு ரயில் மோதிய விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 50 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் மீட்பு பணிகளை பார்வையிட்டு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். இதற்கிடையே, ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர். பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைத்தள பதிவில், இச்சம்பவம் தமக்கு மிகுந்த கவலை அளிப்பதாக தெரிவித்துள்ளார். மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் பொது நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்ச ரூபாய் நிதியும்,

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார். ரயில்வே துறை சார்பில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்ச ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா இரண்டரை லட்ச ரூபாயும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி

*ரயில் விபத்து* 2 (17)

வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, ரயில் விபத்து நடந்த இடத்தில் மீட்பு பணிகள் நிறைவடைந்துள்ளதாக ரயில்வே வாரியத் தலைவர்  ஜெயாவர்மா தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதற்கட்ட விசாரணையில், சரக்கு ரயில் ஓட்டுநர் சிக்னலை கவனிக்கவில்லை என்று தெரியவந்துள்ளதாகவும், விபத்து நடந்த உடனேயே காலை 8.55 மணியளவில் மீட்பு பணிகள் தொடங்கப் பட்டதாகவும் கூறினார். பாதுகாப்பான பயணம் என்பதே ரயில்வேயின் முன்னுரிமையாக உள்ளது என்று தெரிவித்த அவர்,

இந்த விபத்திற்கு மனித தவறே காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தாலும், விரிவான விசாரணைக்கு பிறகே முழு தகவல்களும் தெரிய வரும் என்றார்.

இந்நிலையில், ரயில்வே நிர்வாகத்தில் முறைகேடு நடந்துள்ளதாக காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே தெரிவித்துள்ளார். இன்று அவர் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில், மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில் ரயில்வே அமைச்சகத்தை தவறான நிர்வாகத்தின் மூலம் வழி நடத்தியதாக தெரிவித்தார். மேற்கு வங்கத்தில் நடைபெற்ற ரயில்வே விபத்து குறித்து தமது வருத்தத்தை பதிவிட்டுள்ள

*ரயில் விபத்து* 3 (8)

அவர், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்ததோடு, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டிக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக முழுமையான இழப்பீடு

வழங்க வேண்டும் என்றும் திரு கார்கே மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார்.

இதற்கிடையே, மேற்கு வங்க மாநிலத்தில் நடைபெற்ற ரயில் விபத்து குறித்து புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

*துணை நிலை ஆளுநர்* 1(16)

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று தேங்காய்திட்டு மீன் பிடி துறைமுகத்தில் சமுத்திர சக்தி என்ற மாணவர்களின் கடல் சாகச பயணத்தை கொடியசைத்து நிறைவு செய்து வைத்தார். அப்போது உரையாற்றிய அவர், இந்த கடல் சாகச பயணத்தின் போது மாணவர்களுக்கு நீச்சல், படகுகளை எடுத்தல், ஆழ்கடல் பாய்ச்சல் எனப்படும் ஸ்குபா டைவிங் போன்ற சாகசப் பயிற்சிகள் அளிக்கப்பட்டிருப்பதன்

மூலம் அவர்களின் மன மற்றும் உடல் வலிமை மேம்பட்டிருக்கும் என தாம் நம்புவதாக கூறினார். ஆபத்தான கடல் சாகச பயணத்தை நிறைவு செய்திருப்பதன் மூலம், மாணவர்கள் தங்களது வாழ்க்கையில் சந்திக்கக் கூடிய மிகப் பெரிய சவால்களையும் எதிர் கொள்ளும் வகையில் தங்களை தயார்படுத்திக் கொள்ள முடியும் என்றார். புதுச்சேரி தேசிய மாணவர் படை இயக்குனரகம் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, உதவி தலைமை இயக்குநர் கமோடர் அதுல் குமார் ரஸ்தோகி, தேசிய மாணவர் படையின் குரூப் கமாண்டர் திரு மேனன், கமாண்டிங் அதிகாரி லெப்டினென்ட் அருண் நான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

*துணை நிலை ஆளுநர் 2 (7)*

நிகழ்ச்சிக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய துணை நிலை ஆளுநர் புதுச்சேரியில் குடியிருப்பவர்களுக்கு இடையூராக எந்தெந்த இடங்களில் எல்லாம் மதுபானக் கடைகள்

செயல்படுகிறதோ அவற்றை தடை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார். போதைப் பொருள் ஒழிப்பில் கடந்த 3 மாதங்களில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், போதை பொருட்களை முற்றிலுமாக ஒழிக்கும் வரை கடுமையான நடவடிக்கைகள் தொடரும் என்றார்.

*பக்ரீத் (9)*

தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை இஸ்லாமிய பெருமக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. இந்நாளை முன்னிட்டு நாடு முழுவதும் சிறப்பு தொழுகைகள் நடைபெற்றன. இஸ்லாமியர்களின் இறை தூதரான இப்ராகிம் நபியின் தியாகத்தை போற்றும் வகையில் இந்நாளை பக்ரீத் பண்டிகையாக இஸ்லாமியர்கள் கொண்டாடுகின்றனர். இந்நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு

நரேந்திர மோடி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு ரங்கசாமி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

வானிலை (9)

தென்கிழக்கு அரபிக் கடல் மற்றும் அதனை ஒட்டிய கேரள கடலோர பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும அடுத்த 5 நாட்களுக்கு இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில், அடுத்த 5 தினங்களுக்கு தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் (10)

ஐசிசி உலகக் கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்றிரவு 8 மணிக்கு தொடங்கும் ஆட்டத்தில், நியூசிலாந்து-பப்புவா நியூகினியா-வை எதிர் கொள்கிறது. முன்னதாக, இன்று காலை நடைபெற்ற நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி 83 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதற்கிடையே, சூப்பர் 8 சுற்றுகள் நாளை மறுநாள் தொடங்க உள்ளன. வரும் 20 ஆம் தேதி இந்தியா தனது முதல் போட்டியில் ஆப்கானிஸ்தானை எதிர் கொள்கிறது. குரூப் ஒன்றில், இந்தியா, ஆஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகளும், குருப் இரண்டில், தென்னாப்பிரிக்கா, வெஸ்ட் இண்டீஸ், அமெரிக்கா, இங்கிலாந்து அணிகளும் இடம் பெற்றுள்ளன.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி விவசாயிகளுக்கான வேளாண் நிதி உதவி திட்டமான கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ், 17 ஆவது தவணை தொகையை நாளை விடுவிக்கிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது எண்ண ஓட்டங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் மன் கீ பாத் நிகழ்ச்சிக்கு பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் வரவேற்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று தேங்காய்திட்டு மீன் பிடி துறைமுகத்தில் நடைபெற்ற மாணவர்களின் கடல் சாகச பயண நிறைவு விழாவில் கலந்து கொண்டார்.

தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை இஸ்லாமிய பெருமக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.